பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 தை 17 ஸபர் 20 இதழ் 351
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 30-1-78

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1978 1-30
PERIODICALS DIVISION
LIBRARY

SUN SHINE SOAP
LALA PRODUCT ATCHUVELY
சன்சயின்
வாங்கி பாவியுங்கள்
சன்சயின் சோப்
எல்லாக் கடைகளிலும் விற்பனையாகின்றது.
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

## 'விஸ்கி'யைவீசி விமானக் கடத்தல் முறியடிப்பு!

கரோலினா, ஜனவரி 29

விமானக் கடத்தல் ஒன்று விமானப் பணிப்பெண்ணின் சாதுரியத்தினால் தவிர்க்கப்பட்டது.

கிஞ்சிநாட்டி என்ற இடத்திலிருந்து வடகரோலினா சென்ற உள்ளூர் விமானத்தை கியூபாவுக்குச் செலுத்துமாறு நிராயுதபாணியான சாம் டோக்கின்ஸ் என்பவர் பயமுறுத்தினாராம்.

இச்சமயத்தில் பணிப்பெண் ஒருவர் தமது கையில் கிளாஸில் வைத்திருந்த 'விஸ்கி'யை கடத்தல்காரனின் முகத்தில் வீசவே அவன் நிலைதடுமாறிய

[6ம் பக்கம் பார்க்க]

# ஜனாதிபதி பதவி ஏற்பு வைபவம்

# சுதந்திரக்கட்சியும் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

**பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வைபவத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கலந்துகொள்ளமாட்டாது.**

**மக்களின் உரிமைகளையும், சலுகைகளையும் பறித்தொழிக்கும் இந்நடவடிக்கையை எதிர்ப்பதுடன் பதவியேற்பு வைபவம் எதிலும் பங்குபற்றுது பகிஷ்கரிப்பதென்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி முடிவு செய்திருக்கிறது.**

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் திரு எஸ் கே கே. சூரியாராய்ச்சி பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதில் கலந்துகொள்ளமாட்டாது. கலாநிதி என் எம் பெரேரா இதுபற்றி ஏற்கனவே அறிவித்திருந்தமை தெரிந்ததே.

பிரதான எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியும் இவ்வைபவத்தில் கலந்துகொள்ளமாட்டாது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-இ)

### ஜனாதிபதி அமைப்பு கேலிக்கூத்து

ஜனாதிபதியாகப் பதவியேற்கப்போகும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அதற்கான அனுமதியை மக்களிடம் பெறவில்லையென்றும் இந்த ஜனாதிபதி அமைப்பு ஒரு கேலிக்கூத்தென்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி அமைப்பில் தேசிய அரசுப்பேரவை துச்சமாகவே மதிக்கப்படுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இடதுசாரி ஐக்கியமுன்னணியும் பெப்ரவரி 4-ந் திகதி நடைபெறவிருக்கும் இவ்வைபவத்

## இனப் பகையினால் நாடு குட்டிச்சுவராகும்

### கரவெட்டியில் நிசங்கா

(நெல்லியடி)

"வெவ்வேறு மொழிகளைப் பேசும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த இந்நாட்டு மக்கள் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் இருப்பதன் மூலமே இந்த நாட்டை முன்னேற்றமுடியும். இனத்திற்கு இனம் பகைமை பாராட்டினால் நாடு குட்டிச்சுவராகிவிடும்".

இவ்வாறு கல்வியமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தின கரவெட்டி நாரதிய பௌத்த வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

நேற்று முன் தினம் காலை கல்வியமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்ன நெல்லியடிச் சந்தியை வந்தடைந்ததும் அவரை உடுப்பிட்டித் தொகுதியில் கடந்த தேர்தலில் போட்டியிட்ட திரு. எஸ். சுந்தரம் மாலையணிவித்து வரவேற்றார். மேளவாத்தியங்கள் சகிதம்

(6-ம் பக்கம் பார்க்க)

## போலித் தந்தி மூலம் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை அழைப்பு

### அமைச்சருக்குப் புகார்

[அரியாலை]

கொழும்புத்துறை, பலாலி, கோப்பாய், மட்டக்களப்பு ஆகிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெற்று வெளியேறிய முன்னாள் தோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அரசாங்க பாடசாலைகளில் நியமனம் வழங்குவதற்கு நேர்முகப் பரீட்சைக்கான தந்திகள் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டன.

இத்தந்திகளைப் பெற்ற அறுபதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் நேர்முகப் பரீட்சைக்கு கல்விக்கந்தோருக்குச் சென்றபொழுது தங்களுக்கு அனுப்பப்பட்ட தந்திகள் விஷமிகளின் செயல் என்பதை உணர்ந்தார்கள்.

ஏமாற்றப்பட்ட ஆசிரியர்கள் நல்லூர்த் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரத்தையும், மட்டக்களப்புத் தொகுதி முதலாவது அங்கத்தவர் திரு. இராசதுரையையும் கண்டு தமது நிலையை எடுத்துக் கூறினர்.

ஆசிரியர்களின் ஏமாற்றத்துக்குக் காரணமாக அமைந்த தந்தி பற்றிய விடயத்தை கல்வியமைச்சரின் கவனத்திற்கு தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் கொண்டு வந்ததின் மூலம் இத்தந்தி விடயமாக பூரணமாக விசாரணையை மேற்கொள்ளும்படி இரகசியப் பொலிசாரை அமைச்சு கோரியுள்ளதாம்.

நேர்முகப் பரீட்சைக்காக கொழும்பு சென்ற ஆசிரியர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ]

### காந்தியின் உருவப்படம்

மகாத்மா காந்தியின் பிரார்த்த தினத்தை ஒட்டி இன்றைய "ஈழநாடு" இதழுடன் மில்க்வைற் அன்பளிப்பாக காந்திஜியின் உருவப்படம் வழங்கப்படுகிறது.

## கனகர் கொலை முயற்சி: 20 பேர் விசாரணை; அரசியல் தலைவர்களும் விசாரிக்கப்படுவர்! உடல்நிலை திருப்தி

[கொழும்பு]

பொத்துவில் எம். பி. திரு. எம். கனகரத்தினம் கொலை முயற்சி தொடர்பான புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ள விசேட துப்பறியும் பொலிஸ் குழு இதுவரை சுமார் 20 பேரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளது. இவர்களுள் பெரும்பாலானோர் இளைஞர்களே.

சில அரசியல் தலைவர்களையும் இப்பொலிஸ்குழு விசாரணை செய்யவிருப்பதாகவும் தெரிகிறது.

திரு கனகரத்தினத்துடன் நெருங்கிய தொடர்புடையவரான ஒருவரும் விசாரணைக்குட்படுத்தப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திரு. கனகரத்தினத்தின் கொலை முயற்சி தொடர்பாக துப்பறியும் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த விசேட குழுவொன்று விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இக்கொலை முயற்சிக்கு தனிப்பட்ட காரணங்களெதுவும் இல்லை என்றும் அரசியல் பின்னணியே இதற்குக் காரணம் என்றும் பொலிசார் கருதுகின்றனர்.

சந்தேக நபர்கள் கொழும்புக்கு வெளியிடங்களைச் சார்ந்தவர்களாக இருக்கலாம் என்றும் பொலிசார் கருதுகின்றனர்.

### யாழ். மட்டுநகருக்கு விசேட பொலிஸ் குழு

இதை அடுத்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் துப்பறியும் பொலிஸ் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

### கொழும்பில் சந்தேகநபர்கள் நடமாடினரா?

சந்தேகநபர்கள் மூன்று தினங்களாக சம்பவம் நடந்த இடத்துக்கு அண்மையில் நடமாடியதாக பொலிசார் கருதுகின்றனர். சம்பவம் நிகழ்ந்த இடத்தில் சில தடயங்களும் பொலிசாருக்கு கிடைத்திருக்கின்றனவாம்.

மேலும் பலரை விசாரணை செய்யவுள்ள பொலிசார் அரசியல்வாதிகள் சிலரையும் இக்கொலை முயற்சி தொடர்பாக விசாரணை செய்யவிருப்பதாகக் கூறப்படுகிறது.

கொள்ளுப்பிட்டியிலுள்ள அரசியல் கட்சி சார்பான தொழிற்சங்கமொன்றின் மீதும் பொலிசார் தமது கண்காணிப்பைச் செலுத்திவருகின்றனர். சந்தேகநபர்கள் எந்தநேரமும் கைதாகலாம் என பொலிசார் தெரிவிக்கின்றனர்.

### மீண்டும் சுயஉணர்வு

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் டாக்டர்களின் தீவிர கண்காணிப்பிலுள்ள பொத்துவில் எம் பி. திரு. எம். கனகரத்தினம் நேற்று மீண்டும் சுயஉணர்வைப் பெற்றார்.

சுயஉணர்வைப்பெற்ற அவர் உகந்தை முருகனுக்கு கோவில் கட்டிய பின்னரே மரணம் என்னைச் சேரும் என்றார்.

ஆஸ்பத்திரியில் திரு கனகரத்தினத்தை எவருமே சென்று பார்வையிட முடியாதவாறு தடைசெய்யப்பட்டுள்ளது.

திரு கனகரத்தினத்தின் சகோதரியான திருமதி பத்மநாதன், மைத்துனரான முன்னாள் உணவு ஆணையாளர் திரு பத்மநாதன் ஆகியோர் மட்டுமே ஆஸ்பத்திரியில் அவரைப் பார்க்க அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆஸ்பத்திரியிலும், சம்பவம் நிகழ்ந்த இடமான கொள்ளுப்பிட்டி சாள்ஸ் வேயில்உள்ள திரு பத்மநாதனின் இல்லத்திலும், பொத்துவிலில் உள்ள திரு கனகரத்தினத்தின் இல்லத்திலும் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

[ம-இ]

## வரி விளம்பரம்

### தேவை

சேலை அச்சடித்தல், பற்றிக் பிறிண்டிங், டிசைன் வரைதல் ஸ்கிறீன், எக்ஸ்போஸ்ரிங் முதலியவற்றில் அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாக தேவை. தகுந்த விண்ணப்பங்களை கீழ்கண்டவிலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். ம. தங்கராஜா கந்தசாமி, கோயிலடி, நீர்வேலி. 8367

பா ஓடுவதில் நன்கு அனுபவமுள்ள நெசவு ஆசிரியை அல்லது பா ஓடுவதில் 5 வருட அனுபவமுள்ள பெண் நெசவாளர் தேவை. நேரில் வரவும். இல. 4 மவுண்காமல் வீதி, யாழப்பாணம். 8345

**சன்சயின்**
**அரைபார்சோப்**
இன்றே
கேட்டு வாங்குங்கள்
**லாலா சோப்**
**தொழிற்சாலை**
அச்சுவேலி.

### தேவை

ஹோட்டலில் சகல வேலைகளுக்கும் ஆள்தேவை. நேரில் வரவும். சந்திரகுமார், 68/5 இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். 8344

### விற்பனைக்கு

எண்ணெய் முழுக்குக் சிறந்த ஒலிவ் ஸ்ஞானப்பவுடர் தலையில் உள்ள அழுக்கு பேன், பிசான், சொடுகு ஆகியவற்றை நீக்குகின்றது. வாங்கி உபயோகியுங்கள் ஓர் மில்க்வைற் தயாரிப்பு 8361

தென்னைகளும் தரிசுநிலமும் கொண்ட பனை பெரியமாசார் தோட்டம் 31 ஏக்கர் விற்கப் படும். கண்டி வீதியிலிருந்து முக்கால் மைல் தொலை. தொடர்பு: ஆர். ஜெகேந்திரன், 102 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப் பாணம். 8355

### தவறிவிட்டது

யாழ். நகரில் என்பலப்புடன் பத்திரங்கள் தவறிவிட்டன. அதை எடுத்தவர் உடன் அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். இ. பாலராசன், செட்டியகுறிச்சி, பண்டத்தரிப்பு. 8363

## எம். பி. யுடன் தொடர்பு கொள்வர்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களின் இடநெருக்கடியைப் போக்குவதற்கு கட்டிடங்களை விஸ்தரித்தல், விளையாட்டிடம் அமைத்தல், மின்சார வசதியை ஏற்படுத்தல் முதலான விஷயங்கள்பற்றி கோப்பாய்த் தொகுதித் தேசியப் பேரவை உறுப்பினர்மூலம் வித்தியாபகுதியுடன் தொடர்புகொள்வதென ஊரெழு கணேசவித்தியாசாலைப் பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் திரு ந. துரைராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெற்றார் ஆசிரியர் சங்க முன்னாள் செயலாளர் காலஞ்சென்ற ச. இராமநாதனுக்கு மூன்று நிமிஷநேரம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

புதுவருட உத்தியோகத்தர் விபரம் வருமாறு. தலைவர் திரு ந. துரைராசா, செயலாளர்: திரு. ச. பஞ்சலிங்கம், தனாதிகாரி. திரு. மு. சங்கரப்பிள்ளை, உபதலைவர்: திரு. ச. வடிவேலு, உபசெயலாளர்: திரு. அ. காராளசிங்கம். நிர்வாக உறுப்பினர்களாகப் பதின்மூவர் தெரிவாகினர். [உ]

......

## ஆணையாளருக்கு சுகவீனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் சுகவீனமுற்று யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். [க]

......

## "கலையுடன் இணைந்தது தமிழர் வாழ்வு"

[அரியாலை]

"தமிழ் மக்களின் வாழ்வில் கலை பின்னிப் பிணைந்துள்ளது. கலை இயற்கையாகவே தமிழர் வாழ்வில்சேர்ந்துள்ளது. தமிழ் மக்கள் பிறப்பு முதல் இறப்பு வரை பாடலோடு தொடர்புள்ளவர்களாக அதனோடு இணைந்துவாழ்கிறார்கள். பிற நாட்டவர் எமது இசையால் கவர்ந்திழுக்கப்பட்டுள்ளனர். இதனால் மேலைத்தேய நாட்டைச் சேர்ந்த அறிஞர்கள் பலர் நமது கலையின்மேல் கொண்டபற்றுதலினால் அதனது வளர்ச்சி குறித்து ஆராய்ச்சிகள் செய்துவருகின் கின்றனர்."

இவ்வாறு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் திரு. சின்னையா, சிவநேசன் ரசிகரஞ்சன சபாவின் 27-வது வருடாந்த இசைவிழாவின் 5-ம் நாள் நிகழ்ச்சிக்குத்தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "கலை உலகப்பிரசித்தி பெற்றதாக இன்று விளங்குகிறது. ரசிகரஞ்சன சபா கடந்த 27 ஆண்டுகளாக சிறந்தமுறையில் இசைக்கல்லூரியொன்றை நடத்தி பிள்ளைகளுக்கு இசையையும், இசையின் மேன்மையையும் கற்றுக்கொடுத்து வருவதைப் பாராட்டுதல்வேண்டும். எமது வாழ்க்கை சிக்கல்கள் நிறைந்ததாக அமைந்துள்ளது. பல பிரச்னைகள் மத்தியிலும் சிறிது நேரம் இசையில் நாம் மகிழ்ந்திருந்தால் அப்பிரச்னையை நாம் மறந்து விடுவோம். இசைக் கலையைப் பரப்பவேண்டிய பொறுப்பு இசைக் கல்லூரிகளினது கடமை மட்டுமல்ல, தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்."

இரசிகரஞ்சன சபைத் தலைவர் திரு. ஆர். சி. மன்மதராயன் வரவேற்புரை நிகழ்த்தினார். [உ]

## அருணோதயக் கல்லூரி அளவெட்டி

க. பொ. த. (உயர்தரம்) வகுப்பில் விலங்கியல் கற்பிப்பதற்கு பட்டதாரி ஆசிரியர் உடனடியாகத்தேவை. (பரீட்சைப் பெறுபேறுகளைக் காத்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.)

அதிபர்

30-1-78 8368

## அறிவித்தல்

எம்மால் ஒழுங்குசெய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டு தவிர்க்கமுடியாத காரணங்களால் 19-2-78 திகதி பின் போடப்பட்டுள்ளது.

**இடம்:** இலங்கை வங்கி (யாழ்ப்பாணம்) சிற்றுண்டிச்சாலை.

**நேரம்:** காலை 10-00 மணி.

**அனைவரும் வருக**

பொருளாளர்
இலங்கை வங்கி ஊழியர் சங்கம்
8366 யாழ். மாவட்டம்.

## யா/புற்றளை மகாவித்தியாலயம் புலோலி

**நியமனம்:**

வசதிகளும் சேவைகளும் அளித்தற்கான கட்டண நிதியிலிருந்து நியமனம் செய்யபின்வருவோர் தேவை.

(1) பௌதிகவியல், இரசாயனவியல், கணிதம் ஆகிய பாடங்களைக்கொண்ட பட்டதாரிகள்
(2) சங்கீத ஆசிரியர்.
(3) ஆய்வுகூடச்சேவகர் (Laboratory Attendant)

உடனடியாக நியமனத்திற்குத் தேவை. விபரங்களுடன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

அதிபர்

புற்றளை மகாவித்தியாலயம்,
புலோலி. 8357

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 13289

முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை அராலி தெற்கு, அராலி. வழக்காளி

எதிராக

1. மாரிமுத்து பொன்னுத்துரையும் பெண்
2. சிவயோகம் இருவரும் சித்தங்கேணி, வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை. எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B, 13289ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1978ம் ஆண்டு மாசி மீ 1 உ புதன்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 1475/-ம் 10-8-72 தொடக்கம் 22-2-73 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 10% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 428-30 சதம் இம்முழுத்தொகையிலும் ரூபா 1500/- கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று அராலி தெற்கில் உள்ள "தினியம்புதினி" என்னும் 5 நெற்பரப்பு காணி இதற்கு எல்லை கிழக்கு தண்ணீர் வாய்க்கால், வடக்கு மாரிமுத்து பொன்னுத்துரை பெண் சிவயோகத்தின் ஆதனம், மேற்கு கதிர்காமர் அப்புக்குட்டியின் ஆதனம், தெற்கு இராமலிங்கம் கைம்பெண் இரத்தினத்தின் ஆதனம். இது அடங்கலிலும்.

சி. சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனையாளரும்,
மதிப்பாளரும்.

தொல்புரம்,
25-11-77. 8365

## இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் பயிற்சி நிலையம்

**வகுப்புகள்:-** G A.Q., G.S.Q., First in Commerce B. A., B. com.

**நடைபெறும் இடங்கள்:-** யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டுநகர்.

**தகைமைகள்:** (I) G. C. E. A/L நான்கு பாடங்கள் சித்தியடைந்திருந்தல்வேண்டும். (II) 25 வயதிற்கு மேற்பட்டோர் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 2-2-78**

**புதிய வகுப்புகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 4-2-78.**

புதிதாக பதிய விரும்பும் மாணவர்கள் பாடங்கள் பற்றிய விபரத்தையும் பதிவு அனுமதிப் பத்திரத்தையும் முத்திரையிட்ட சுயமுகவரி கொண்ட 9'' × 4'' தபால் உறை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பர இல 1000,
C/o, ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.

தா. க. பொன்னுத்துரை ஜே. பி.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
தொலைபேசி இல: 7105

"அகிலகம்"
28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம். 28-12-77.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

சி. ஆறுமுகம் கணபதிப்பிள்ளை, காரைநகர் மேற்கு, காரைநகர், வழக்காளி

இல ஈடு/15033

எதிராக

1. சங்கரப்பிள்ளை நடராசாவும்
2. பெண் விஜயலட்சுமியும், மணற்பிட்டி, காரைநகர் மேற்கு, காரைநகர் எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் ஈடு/15033ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனங்கள் 1978ம் ஆண்டு மாசி மாதம் 6ந் திகதி (6-2-1978) திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதலும் வட்டியுமாக 3,720/- மேலும் 2,000/- ரூபாவிற்கு 16-9-1975 — 17-3-1977 வரைக்கும் நூற்றுக்கு 12 வீத வட்டியுங் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 17-3-1977 தொடக்கம் முழுப் பணம் இறுக்கும் வரைக்கும் 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு 597/87 சதமும் [ஏற்பட்ட செலவு 381/87. ஏற்படவேண்டியது 117/50, சமயாசமடச் செலவு 98/50]

### ஆதன டாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தீவுப்பகுதி, காரைதீவுக் கோவிற்பற்று, காரைதீவு மேற்கிறை "மணற்பிட்டி" நில பர. 2¼ தென்னைகள், வான்பயிர் செய்பயிர் வகைகளும் கிணறும், எல்லை கிழக்கு ஆறுமுகம் கைம்பெண் தெய்வானைப்பிள்ளையினுதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு செல்லையா விசுவலிங்கத்தினுதனம், தெற்கு 2ம் ஆதனம் இதடங்கலும்.

2. டியிறை "மணற்பிட்டி" நில பர. 2 பனைகள் வான்பயிர் செய்பயிர் வகைகளும் எல்லை கிழக்கு 3ம் ஆதனம், வடக்கு ஆறுமுகம் கைம்பெண் தெய்வானைப்பிள்ளையினுதனமும் 1ம் ஆதனமும், மேற்கு செல்லையா விசுவலிங்கத்தினுதனம், தெற்கு ஆறுமுகம் பெண் பாக்கியத்திற்கும் சரவணைமுத்து பெண் சரஸ்வதிக்குமுரியவாதனங்கள் இதடங்கலும்.

3. டியிறை "மணற்பிட்டி" நிலபர. 1 குளி 2.7 பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு சின்னப்பு சரவணைமுத்துவினுரித்தாளருக்கும், வேலுப்பிள்ளை கைம்பெண் செல்லம்மாவுக்குமுரியவாதனங்கள், வடக்கு ஆறுமுகம் கைம்பெண் தெய்வானைப்பிள்ளையினுதனம், தெற்கு சரவணைமுத்து பெண் சரஸ்வதியினுதனம், மேற்கு 2ம் ஆதனம்.

தா. க. பொன்னுத்துரை J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
8346

ஈழநாடு
The Eelanaadu

## அரசியலில் வன்செயல்கள்

பொத்துவில் தொகுதி இரண்டாவது எம். பி. திரு எம். கனகரத்தினம் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்ட செய்தி, அரசியல் வாதிகளுக்கு மட்டுமல்ல நாட்டுமக்கள் அனைவருக்குமே அதிர்ச்சியளிப்பதாகும்.

அரசியல் பிரச்னைகளுக்கு வன்செயல் மூலம் தீர்வு கண்டுவிடமுடியாதுஎன்பது உலகஅனுபவம்.

இதுபோன்ற செயலை நாட்டுமக்கள் வன்மையாகக்கண்டிக்கவேண்டியது அவசியம்.

திரு. கனகரத்தினத்தின் மீது நடந்த துப்பாக்கிப் பிரயோகத்துக்கு என்ன காரணம் என்பது இன்னமும் சரியாகத்தெரியவில்லை, ஆனாலும் அரசியல்தான் காரணம் என்று கூறப்படுகிறது.

நமது நாடு, ஜனநாயக முறையைப் பின்பற்றும் ஒரு நாடாகும். அரசியல் வாதிகளானாலும், சாதாரண பொதுமக்களானாலும், எந்த அரசியல் கட்சியின் கொள்கையைப் பின்பற்றுவதற்கும் உரிமையிருக்கிறது.

ஒருவர் பின்பற்றும் அரசியல் கொள்கையை மக்கள் ஏற்றுக்கொள்கிருர்களா, நிராகரிக்கிருர்களா என்பதைத் துப்பாக்கியால் தீர்மானிக்கக்கூடாது.

ஜனநாயக நாட்டில் தேர்தல் நடைபெறும்போது, ஒருவர் பின்பற்றும் அரசியல் கொள்கையை மக்கள் ஏற்றுக்கொள்கிருர்களா, நிராகரிக்கிருர்களா என்பதை வாக்குகளால்தான் தீர்மானிக்கவேண்டும். இதுவே உண்மையான ஜனநாயக முறையுங்கூட.

கட்சிவிட்டுக் கட்சி மாறுவதும், முதலில் ஒரு கொள்கையைப் பின்பற்றி, பின்னர் வேருெரு கொள்கையைப் பின்பற்றுவதும் ஜனநாயக நாடுகளில் நடைபெறமுடியாதபுதுமையல்ல.

இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், கட்சி விட்டுக் கட்சி மாறுவது சாதாரண நிகழ்ச்சி.

காலையில் ஒரு கட்சியிலிருந்து விலகி, மாலையில் வேறு கட்சியில் சேர்ந்து, இரவில் மீண்டும் பழைய கட்சிக்கே போய்ச் சேர்ந்த நிகழ்ச்சிகள் சமீபத்தில் தமிழ்நாட்டில் நடந்திருக்கின்றன.

அரசியல் வன்செயல்கள் சமீபகாலமாக நமது நாட்டில் அதிகரித்துவருகிறது. இது இன்னும் நீடிக்குமாஞல் ஜனநாயகத்துக்கே அழிவு நேர்ந்துவிடும்.

எந்தப் பிரச்னைக்கும் துப்பாக்கியால் தீர்வுகாணமுடியும் என்ற சிந்தனையையே மக்கள் வெறுக்கவேண்டும்.

பேச்சுவார்த்தைகள் மூலமும், ஜனநாயக வாக்களிப்பு மூலமுந்தான் அரசியல் பிரச்னைகளுக்குத்தீர்வுகாண்பதைப் பின்பற்றவேண்டும் என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது.

# "பாரதத்தில் முஸ்லிம்களின் தனித்துவம் பேணப்போராடிய இலட்சியக்கவி இக்பால்"

## எதிர்க்கட்சித் தலைவர் 'அமிர்' புகழாரம்

(யாழ்ப்பாணம்)

"கவிக்குயில் பாரதி தமிழ்நாட்டில் விடுதலை உணர்வுகளைத் தட்டி எழுப்பியது போல் கவிஞர் இக்பால் இந்தியவாழ் முஸ்லிம் மக்கள் விடுதலை பெற்ற இனமாக மற்றவர்களைப்போல் இரண்டாந்தரமற்ற பிரஜைகளாக வாழவேண்டுமெனக் கனவு கண்டார்."

யாழ். ஒஸ்மானியா கல்லூரி மண்டபத்தில் நடந்த கவிஞர் இக்பால் நூற்ருண்டு விழாவில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

முஸ்லிம் பகுதியில் உள்ள இல்லமொன்றில் கல்வி அமைச்சர் வடபகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்களைச் சந்தித்தபின் அங்கிருந்து ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டார். வீதியெங்கும் முஸ்லிம்மக்கள் திரண்டு நின்று அமைச்சரை வரவேற்ருர்கள்.

கல்லூரி வாசலில் மாணவர்கள் அணிவகுத்து நிற்க விழாக் குழுவினர் அமைச்சருக்கு மாலை சூட்டி அழைத்துச் சென்றனர்.

### மக்களின் மதிப்பைப் பெற்றவர்

கல்லூரி மேல்மாடி மண்டபத்தில் சட்டத்தரணி எம். எம். மன்சூர் தலைமையில் நடந்த விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

பல நூற்ருண்டுகளுக்கு முன் உலகில் அவதரித்த மகாகவிகளில் இக்பாலும் ஒருவராவர். உலகெங்குமுள்ள மக்களின் மதிப்பைப் பெற்றவரான கவிஞர் ஒரு சிறு கிராமத்தில் பிறந்தார். இந்தியாவில் கல்வி கற்று இளம் வயதிலேயே கவிதைகளை புனையத்தொடங்கினர்.

இலக்கணம் படித்து எதுகை மோனையுடன் கவிதை பாடியவரல்ல. ஆண்டவன் அருளினுலே உள்ளத்து உணர்ச்சிகளை கவிதைமழையாகப் பொழிந்தார். கவிதை ஊற்றுகளை அவர் கற்பனு சக்தியெனக்கூறினர்.

### இலக்கியம் படைத்தார்

ஆண்டவன் அருளினுலே உள்ள உணர்ச்சிகளை கருத்துக்களை வடித்து, இறவாத புகழ்மிக்க இலக்கியம் படைத்து உலகிற்கு அளித்த மகாகவியாக தத்துவ ஞானியாக, ஆசிரியராக, அரசியல் ஞானியாக மதிக்கப்பட்டார்.

மனித விடுதலைக்காகப் பாடுபட்டார், ஆண்டவன் பிரதிநிதியாக மனிதனைக் கண்டார் கட்டுக்கதைகளை ஒழித்துக்கட்ட, சுரண்டலை ஒழிக்க, மனிதன் வாழவேண்டும் என அழகுறப் பாடினர். சுரண்டி வாழும் சமுதாயத்தை எதிர்த்தார். இதற்கு எவர் தடையாக இருந்தார்களோ அவர்களைக் கவிதையால் சாடினர்.

மனிதன் வாழவேண்டும் என விரும்பிய அவர் இஸ்லாம் மதகோட்பாடுகளுக்கு அமைய வேண்டும் என்பதை கவிதையில் இழையோடினர்.

1930-ம் ஆண்டு அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவராக பதவியேற்றதும் இந்தியா இரண்டு தேசிய இனத்தின் தாயகம் என்ற கருத்தை வெளியிட்டார். தேசிய தலைவர்களாக மகாத்மாகாந்தி, ஜவஹர்லால்நேரு போன்றவர்கள் இந்தியா ஓர் இனத்தைக் கொண்ட நாடு என்று கோஷித்துக்கொண்டிருந்த நேரத்தில் தன் கருத்தை வெளியிட்டார்.

### முஸ்லிம்கள் தனித் தேசிய இனம்

இந்துசமுதாயம், முஸ்லிம் சமுதாயம் தனித்தனியாக வாழ்கிறது என்ருர். முஸ்லிம் தனித்தேசிய இனம் என்றும் வடமேற்கில் பெரும்பாலான பகுதியில் முஸ்லிம்கள் வாழ்வதாகவும், அப்பகுதியில் முஸ்லிம்கள் சுதந்திர தனிநாட்டை அமைக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர் இக்பால்.

1931ம் ஆண்டு அகில இந்திய முஸ்லிம் தலைவராக லண்டனுக்குச் சென்ற அவர் வட்டமேசை மகாநாட்டில் முக்கிய முஸ்லிம் பிரதிநிதியாகசென்று கலந்துகொண்டார். அந்த நேரத்தில் அவர் கூறிய கருத்து கசப்பாக இருந்தாலும் அவர் தூரதிருஷ்டியாகக்கண்ட கனவு நினைவாகியது.

இக்பாலை என்பக்கம் அழைத்துக்கொள்ள நான் முயல்வதாக யாரும் நினைக்கலாம். ஒரு நாடாகக் கருதப்பட்ட இந்தியாவில் முஸ்லிம்கள் இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதைக் கூறி, முஸ்லிம்களுக்கு தனிநாடு அமைக்க இந்தியா உதவவேண்டும் என்று தெரிவித்தார்.

இக்பால் ஒருநாட்டுக்குமாத்திரம் சொந்தமானவரல்ல, உலக மகாகவியாக விளங்கினர். 1938ம் ஆண்டு அரசியல் ஞானி இக்பால் மறைந்தார். 10 வருடம் சென்றபின் அவரது கனவு நினைவாகியது, பாகிஸ்தான் என்ற சுதந்திர நாடு உருவாகியது.

அரசியல் ஞானியான இக்பால் அரசியல் சித்தாந்தம் வடித்துக்கொடுத்தார். மனிதன் அச்சமற்றவனுக வாழவேண்டும் எனக் கவிதைகளில் கூறினர். மனிதன் மனிதனுக வாழவேண்டும்என்பதே அதன் சாராம்சமாகும்.

தனிமனிதன் கட்டுக்கதைகளிலிருந்து விடுதலைபெறவேண்டும். இனங்கள் விடுதலை பெறவேண்டும், உலகில் எங்கும் எதிலும் விடுதலையான சமுதாயத்தைக் காணத் துடித்தார். அவர் ஒரு தத்துவ ஞானியாகவும் விளங்கினர்.

### உலகப் பல்கலைக்கழகங்களில்

உலகப் பல்கலைக் கழகங்களில் அவரது கவிதைகள் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. உலகில் என்றும் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டார். பலநூற்ருண்டுக்கு ஒருமுறைதோன்றும் கவிஞர்கள் கவிதாபொக்கிஷத்தைக் கருத்துக்களை வழங்கிச் செல்வார்கள் நாம்அக்கருத்துக்களை வாழ்நாளில் கைக்கொள்ள வேண்டும்.

கவிஞர் இக்பாலின் கற்பனையில் உதித்த கருத்தில் பாகிஸ்தான் என்ற சுதந்திர நாடு மலர்ந்துள்ளது.

எங்கு அடிமைத்தனம் சுரண்டல், மனிதன் நசுக்கப்படுகின்ருனே, அங்கு அவர் குரல் எழுந்தது. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் மூலம் உலக சமுதாயத்தை காண நாம் உழைப்பதுதான் அவருக்கு செய்யும் அஞ்சலியாகும்.

யாழ்ப்பாண எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் கூறியதாவது: ஒரு நூற்ருண்டுக்கு ஒருமுறை தோன்றும் கவிஞர்களில் இக்பாலும் ஒருவராவார். அவர் ஒரு தத்துவஞானி. 1947-ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடையுமுன், இஸ்லாமியர் ஒரு தனிச்சமுதாயமென்றும், அவர்களுடைய கலை, கலாச்சாரத்தைப் பாதுகாக்க, தனித்துவத்தைப்பேண நாடு ஒன்று அவசியம்என்றகருத்தை வெளியிட்ட அரசியல் ஞானி அவர்.

மனிதன் முழுமனிதனுக வாழவேண்டும் என விரும்பினர். சுதந்திரத்துடன் தலை நிமிர்ந்து வாழக்கூடியவனே மனிதனுவான். சுதந்திரத்துடன், தன்மானத்துடன் மொழி, கலை, கலாச்சாரத்துடன் பேணிப் பாதுகாக்க வேண்டிய வழிவகைகளை தமது கவிதைகள்மூலம் எடுத்துக்கூறினர். பாகிஸ்தான் நாடு ஒன்று உருவாகுவதற்கு பலவருடங்களுக்கு முன்னரே, அதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

யாழ். மேல்நீதிமன்றநீதிபதி ஜனப் எம். எம். அப்துல் காதர் பேசுகையில் கூறியதாவது: மனித உலகத்திற்கு வாழ்வளிக்கும் எத்தனையோ அறிவுரைகளை, கவிஞர் இக்பால் கவிதையில் எமக்கு வடித்துத் தந்துள்ளார். அவரின் கவிதைகள் ஒவ்வொன்றும் நமது நல்வாழ்விற்கு வழிகாட்டியாக அமைகின்றன.

அண்மையில் சாகிரா கல்லூரி கருத்தரங்கொன்றில் திருக்குரான் முதலாளித்துவத்திற்கு சாவுமணி அடித்துள்ளதாக இக்பால் கூறியதாக ஒருவர் தெரிவித்தார். இக்பால் அப்படி கூறியிருக்கமுடியாதென மற்ருெருவர் அக்கருத்தரங்கில் கூறினர்.

முதலாளித்துவத்திற்கு சாவுமணி அடித்ததென்று கூறியது உண்மைதான். ஆனல் அதன் அர்த்தம் வெவ்வேறு விதமாக வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது. நியாயமான முறையில் பணம்சம்பாதித்து நியாயமான முறையில் செலவிடுகிறவர்களை அவர் எதிர்க்கவில்லை. செல்வத்தைச் சேகரித்துவைத்துக்கொண்டு, சுரண்டிக்கொண்ருக்கும் முதலாளித்துவத்தையே எதிர்த்துவந்தார்.

செந்தமிழர் இயக்க செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:

"ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் இந்நாட்டில் வாழும் சகல இன மக்களுக்கு ஜனநாயகத்தைப்பேணி உரிமை வழங்கவேண்டும். சுரண்டல்களை ஒழித்து சகல மக்களின் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கவேண்டும். இதனையே மகாகவி இக்பால் வலியுறுத்திக் கூறியிருக்கின்ருர்.

கவிஞர் இக்பால் ஜெர்மன் நாட்டிற்குச்சென்று கலாநிதிப் பட்டம் பெற்று, இங்கிலாந்து சென்று சட்டத்தையும் பயின்று பாரிஸ்டர் பட்டம் பெற்று பேராசிரியராக விளங்கினர்.

மக்கள் உரிமை உள்ளவர்களாக வாழவேண்டும் என விரும்பினர். அடிமை வாழ்வை அகற்ற அரும்பாடுபட்டார். முதலாளித்துவ அமைப்பு முறையை சாடினர்."

யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேசும்போது, தனது காலத்தில் வாழ்ந்த மக்களுக்காக, சமுதாய முன்னேற்றத்

(4-ம் பக்கம் பார்க்க)

## காந்தி ஜெயந்தி தினம்

[அரியாலை]

உடுவில் தெற்கு வள்ளுவர் கலைமன்றத்தின் சார்பில் காந்தி ஜெயந்தி தினம் இன்று மாலை கலைமன்றச் செயலகத்தில் கொண்டாடப்படவிருக்கிறது.

கலைமன்றத் தலைவர் திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், பலர் சர்வோதய தினம் பற்றியும், கிராம சுயராச்சியம் பற்றியும் சொற்பொழிவாற்றுவார்கள். [உ]

### மணிவாக்கு

சந்தர்ப்பங்களை நாம் தான் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். சந்தர்ப்பங்கள் எம்மைத் தேடி வரப்போவதில்லை.

—பெர்ஞட்ஷா

# யாழ். மாநகர தொழிலாளர் 31-ம் திகதி வேலைநிறுத்தம்!

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபைத் தொழிலாளர்கள் தங்களின் 21 கோரிக்கைகளை முன் வைத்து நாளை வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள முன் அறிவித்தல் கொடுத்திருக்கிருர்கள்.

இவ்வேலை நிறுத்தம் தொடர்பாக இலங்கை பொதுக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் யாழ் மாநகர சபை கிளை விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபையில் வேலைசெய்யும் 600 பேர்களுக்கு மேற்பட்ட தொழிலாளர்களாகிய எமக்கு நியாயமான முறையில் கிடைக்க வேண்டிய உரிமைகளை கடந்தகால நிர்வாகங்களும் தற்போதைய நிர்வாகமும் பல வருடங்களாக தரமறுத்து வருகின்றன. இந்நிலையில் நாம் முன்வைத்துள்ள 21 கோரிக்கைகள் கிடைக்காததால் எங்கள் வாழ்க்கை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே தொழிலாளர்களாகிய நாம் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழி இல்லையென்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

யாழ் மாநகரசபையில் வேலை செய்யும் மின்சாரப் பகுதி, சுகாதாரப்பகுதி மராமத்துப் பகுதி, தண்ணீர்ப் பகுதி ஆகியவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், ஊழியர்கள், லிகிதர்கள், அனைவரும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 மணியிலிருந்து வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம்.

### மத்திய கிழக்கு விவகாரம்:
### இஸ்ரேலின் விடாப்பிடியான போக்கு

# யு.எஸ்., ரஷ்யா தூண்டுதல்; சீனு குற்றச்சாட்டு

பீகிங், ஜன. 29

மத்திய கிழக்கு விவகாரத்தில் இஸ்ரேல் அரசு விடாப்பிடியான போக்கில் இருப்பதற்கு அமெரிக்காவும், ரஷ்யாவும் பக்கபலமாக இருந்து இஸ்ரேலைத் தூண்டிக்கொண்டிருப்பதே காரணமாகும்.

இவ்வாறு சீனு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜெரூஸலம் பேச்சு முறிவு குறித்து நவசீன செய்தி ஸ்தாபனம் கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு குற்றஞ்சாட்டியது.

**நியாயமானதே**

ஜெரூஸலம் பேச்சுவார்த்தைகளில் இருந்து எகிப்து வாபஸ் பெற்றுக்கொண்டது நியாய பூர்வமானதேயென்றும் இச்செய்தி ஸ்தாபனம் கூறியது.

இப்பேச்சுவார்த்தைகள் முறிவடைவதற்கு இஸ்ரேல் தான் காரணமென்றும் கருத்துத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எகிப்திய அதிபர் அன்வர் சதாத் அடுத்த மாதம் வாஷிங்டன் செல்வது நிச்சயமென்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 4ம், 5ந் திகதிகளில் இவர் அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டரைச் சந்திப்பார்.

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பான புதிய நடவடிக்கைகள் குறித்து இரு தலைவர்களும் ஆராய்வர்.

**அல்ஜீயர்ஸ் உச்சி மாநாடு**

எகிப்திய அதிபரின் நடவடிக்கைகளுக்கு எதிரான அரபுநாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாடு அல்ஜீயர்ஸில் அடுத்த மாதம் நடைபெற இருக்கிறதல்லவா?

இம்மாநாட்டில் தாம் கலந்துகொள்ளப்போவதில்லை என்று ஈராக் தெரிவித்துள்ளது.

**அமைச்சர் கமல் கருத்து**

இது இவ்வாறிருக்க, எகிப்துக்கும் இஸ்ரேலுக்குமிடையே பெரும் இடைவெளி உள்ளதென்று எகிப்திய வெளியுறவு அமைச்சர் ஜனுப் கமல் கெய்ரோவில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

மத்திய கிழக்குப் பிரச்னை, ஒரு சில தினங்களில் தீர்ந்துவிடக்கூடியதல்ல என்றும் சொன்னுர் அவர். [உ]

# "முதலில் கடமை பின்னரே உரிமை"
## தமிழக ஆளுநர் அறிவுரை

சென்னை, ஜன. 29

"தொழிலாளர்கள் உரிமையிலும் பார்க்க கடமைக்குத்தான் முதலிடம் அளிக்க வேண்டும்" என்று தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி கூறினுர்.

சென்னையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் மேலும் பேசுகையில், "தொழிலாளர்கள் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்". [உ]

# ஐந்து ஆண்டுகளில் ஐந்து இலட்சம் பேருக்கு வேலை
## எம். ஜி. ஆர். அரசின் திட்டம் என்கிருர் அமைச்சர்

சென்னை, ஜன. 29

"தமிழக அரசு 5 ஆண்டுகளில் 5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது" என்று திரு. எட்மன்ட் கூறினுர்.

உதக மண்டலத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு சொன்னுர்.

"இலங்கையிலிருந்துவரும் அகதிகளை நல்ல இடத்தில் குடியேற்றி அவர்கள் வாழ்வை வளப்படுத்துவதிலும் தமிழக அரசு கவனம் செலுத்தியுள்ளது" என்று கூறிய அமைச்சர், "தொழிற்சாலைகள் பல நிறுவி தொழில் வளத்தை ஏற்படுத்துவரும் அரசின் திட்டங்களில் ஒன்று என்றுர். உ]

# "மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானத்தையே பாரதம் விரும்புகிறது
## அமைச்சர் வாஜ்பாய் சொல்கிருர்

ஹைதராபாத், ஜன. 29

"மத்திய கிழக்கு விவகாரத்தில், நிரந்தரத் தீர்வொன்றையே பாரதம் விரும்புகின்றது. இறுகிற ஒப்பந்தங்களை இது விடயத்தில் பாரதம் ஆதரிக்கவில்லை."

இவ்வாறு பாரத வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாய் கூறினுர்.

ஹைதராபாத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு சொன்னுர்.

"தான் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும் என்ற பலஸ்தீனியர்களின் கோரிக்கை நியாயமானதே" என்றும் திரு.வாஜ்பாய் மீண்டும் வலியுறுத்தினுர். [உ]

# "வங்கிகளின் உதவியை மக்கள்பயன்படுத்தவேண்டும்"

(வட்டுக்கோட்டை)

"தொழில் அபிவிருத்திக்கு வங்கிகள் உதவும் முறையை அரசாங்கம் பெரிதும் ஆதரித்துவருகிறது. இதனை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்துவதன் மூலம் தம்மை மேன்மையடையச் செய்யலாம்."

இவ்வாறு பண்டத்தரிப்பு மீன்பிடிச் சங்கத் தலைவர் திரு. நா. இராசரத்தினம், மேற்படி சங்கத்தின் பதினெராவது கிளையின் கூட்டம் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது பேசுகையில் கூறினுர்.

கீழ்க் கண்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றை வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவிடம் கையளிப்பதென்றும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

முடிக்குரிய காணிகளையோ, வேறு காணிகளையோ பெற்று வீடு கட்டும் திட்டங்களை மேற்கொள்ளல்;

கடற்றொழில் அபிவிருத்திக்கான மீன்பிடி வள்ளங்கள் வலைகள் உபகரணங்கள் ஆகியவற்றை வங்கிகளின் உதவி மூலம் பெறுதல்;

கடல் துறைக்குச் செல்லும் பாதைகளைச் செப்பனிடல்;

கொத்தத்துறை, அராலித்துறை என்பனவற்றை விருத்தி செய்தல் முதலியன. [இ]

...

### மோதல்

மதுரை, ஜன 29

மதுரையில் பாண்டியன் போக்குவரத்துச் சேவை ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

சமரச முயற்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஈடுபட்டுள்ளார். (உ)

### சுன்னுகம் ஆசிரியை இல்லக்கொள்ளை:
# அணிவகுப்பில் சந்தேகநபர் அடையாளம்காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம்பொலிஸ் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சுன்னுகம் ஆசிரியை இல்லக் கொள்ளைச் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பில் இக்கொள்ளையின் முக்கிய சந்தேக நபரெனக் கூறப்பட்ட சுன்னுகத்தைச் சேர்ந்த தாசன் என்ற வாலிபர் அடையாளம் காணப்பட்டார்.

மேற்படி அடையாள அணிவகுப்பு மல்லாகம் பதில் நீதவான் திரு. ஜி. வி. பாலசிங்கம் முன்னிலையில் நடைபெற்றது.

பிரஸ்தாப சந்தேகநபர் றிமாண்டில் இருந்து கொண்டு வரப்பட்டு அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டார்.

இவரை பிரஸ்தாப ஆசிரியையும் அவரது புதல்வியும் ஆசிரியையின் உறவினரான மாணவரொருவரும் அடையாளம் காண்பித்தனர்.

சந்தேகநபரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்ட மல்லாகம் மாவட்ட நீதவான் திரு. எம். டி. ஜேசுரட்ணம் மேல்விசாரணையை அடுத்தமாதம் 14-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

பிரஸ்தாப ஆசிரியையின் வீட்டில் இரவு வேளை ஆயுதங்கள் சகிதம் வந்த கொள்ளைக்கோஷ்டியினர் அங்கிருந்து சுமார் 25,000 ரூபா பெறுமதி மிக்கத் தங்க ஆபரணங்களைக் கொள்ளையடித்துச் சென்றதாம்.

**பிரபா**

சம்பவவேளை கொள்ளையர் நாங்கள்தான் வங்கிக் கொள்ளை பிரபா என்று தம்மைக் கூறிக்கொண்டதாகப் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக்கொள்ளை தொடர்பாக ஏற்கனவே மூவர் கைதாகினர்.

பொலிஸ்சார்ஜன்ட் பொன்னம்பலம் கான்ஸ்டபிள் கந்தசாமி ஆகியோர் நடத்திய புலன்விசாரணைகள் மூலம் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் பெரும்பாலானவை கைப்பற்றப்பட்டு விட்டன. (உ)

# தமிழகத்தில் ஈழக் கலைஞருக்கு கௌரவம்

மதுரை, ஜன. 29

மதுரை பன்னிரு திருமுறை மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற மார்கழிப் பாராயண நிறைவு விழாவில் இலங்கைக் கலைஞர் பிரம்மஸ்ரீ எஸ். வி. நித்தியானந்த சர்மாவுக்குக் கௌரவமும் பாராட்டும் கிடைத்தது.

மேற்படி மன்றத்தின் அழைப்பை ஏற்றுச் சங்கீத கதாப் பிரசங்க வித்துவான் 'கான கதா வாரிதி' பிரம்மஸ்ரீ நித்தியானந்தசர்மா அங்கு சென்றிருந்தார்.

மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தலைமையில், மதுரை மீனுட்சி தேவஸ்தானத்தில், திரு சர்மா இன்னிசைத் தொடர் விரிவுரை நிகழ்த்தினுர். (உ)

### நாளை சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் ஸ்ரீ கொன்றையடி வைரவசுவாமி கோயில் கும்பாபிஷேக தினத்தை யொட்டி சகஸ்ரம் காசங்காபிஷேகம் நாளைக்காலை நடைபெறுகிறது. 1008 சங்குகளால் விசேஷ அபிஷேகமும், இரவு சமய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இரவு நிகழ்ச்சிகளில் "பரமனின் சிறுவன்" என்னும் பொருள்பற்றி வித்துவான் க. சொக்கலிங்கம் உரையாற்றுவார். யாழ். திருமுறை மன்றம், நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகம் பஜனை நிகழ்ச்சியும், விசேட மேளக்கச்சேரியும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

(கெ-உ)

# "ஜனநாயகம் தழைப்பதில் பத்திரிகைகளின் பங்கு"
## பிரதமர் தேசாய் வலியுறுத்து

புதுடில்லி, ஜன. 29

"நாட்டில் ஜனநாயகம் தழைத்தோங்குவதற்கு பத்திரிகைகளின் பணியும் இன்றியமையாதது" என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறினுர்.

புதுடில்லியில் ஆஸ்திரேலிய பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டியின் போதே பிரதமர் மேற்கண்டவாறு சொன்னுர்.

பாரதத்தின்பொருளாதாரத் திட்டம் குறித்தும் பிரதமர் விளக்கினுர். [உ]

### தனித்துவம்—

[4ம் பக்கத் தொடர்ச்சி]

திற்காக கவிஞர் இக்பால் பாடுபட்டார் எனக் கூறினுர்.

அல்ஹாஜ் என்.எம். மீரான் முகதீன் ஆலிம் பேசுகையில், மனித உயர்வுக்கு என்னென்ன வழிகள் மனித உயர்வுக்கு என்னென்னவழிகள் உண்டோ அவற்றையெல்லாம் கவிஞர் இக்பால் கூறினுரென்றுர். (ஈ)

சன்சயின்
அரை பார் சோப்
இன்றே கேட்டு வாங்குங்கள்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

**நாகம்ஸ்**
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
K. பாலசந்தரின்
**அபூர்வராகங்கள்**

**புலோலி,சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 4-30 7-00 9-30
**Spanish Fly**

**Regal** (Jaffna)
தினசரி 2-30, 6-30 இரவு 9-45 மணிக்கும்
ரவிச்சந்திரன் காஞ்சனா நாகேஷ்
நடித்த
**உத்தரவின்றி உள்ளேவா**
புத்தம் புதிய கொப்பி (கலர்)

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
**மூன்று முடிச்சு**
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

**மனோஹரா** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் - ஜெயந்தி
**நீர்க்குமிழி**
(புதியபிரதி)

50-வது நாளாக வெற்றி நடை போட்டு ஓடுகிறுள்
**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
**இன்ஸ்பெக்டர் மனைவி**
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

**ராஜா** —யாழ்ப்பாணம்
தினசரி: 4 காட்சிகள்
சிவாஜி
கே. ஆர். விஜயா
நடித்த
**தங்கை**
(புதிய பிரதி)

நாலாவது வெற்றிவாரம்
**ராணி** வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் — ஜெனீட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
**நான் உங்கள் தோழன்**
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது நடைபெறுகிறது!
**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30,6-30, 9-45
நாளை மட்டும்
எம்.ஜி.ஆரின் **அரசிளங்குமரி** (புத்தம் புதியபிரதி
1-2-78 முதல் கே. ஆர். விஜயா
**வாயாடி** (புதிய பிரதி)
சிறுவர்களுக்கான ஆங்கிலப் படக் காட்சி
பிரதி சனியும் ஞாயிறும் காலை 8-30 மணிக்கு மட்டும் காண்பிக்கப்படும்.
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்
[பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
**மூத்தான முத்தல்லவோ**

வெற்றி நடைபோடுகிறது
வீரோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-36, 6-30, 9-30
(யாழ்.நகர்) போன்; 7693
**நீதிக்கு தலைவணங்கு**


"செக்கோஸ்லவாக்கியாவில்

# சமஷ்டி அமைப்பின் கீழ்

## சிறுபான்மையினர் வாழமுடிந்தது

### கருத்தரங்கில் செக். ஸ்தானிகர்

[யாழ்ப்பாணம்]

"சமத்துவம் என்பது தானுக ஏற்படும் ஒன்றல்ல. திட்டமிட்ட அபிவிருத்தி வேண்டும். அதற்கென நன்கு அமைந்த அரசியல் அதிகாரம் வேண்டும் அரசு திட்டமிட்டு அபிவிருத்தி குறைந்த பகுதிகளில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் நாட்டம் கொள்ளவேண்டும். இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்பு செக் மக்கள் வாழ்ந்த பகுதியில்தான் அபிவிருத்தியும், முதலாளித்துவ சமூக அமைப்பின் நிலைக்களமும் இருந்தது. சோஷலிஸ சுதந்திரத்தின் பின் இனங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வை ஒழித்து அபிவிருத்தி குன்றியிருந்த நாட்டின் கிழக்குப் பகுதியாக விளங்கிய ஸ்லாவ் மக்களின் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட்டது"

யாழ்ப்பாணம் வாடிவீட்டில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் செக்கோஸ்லவாக்கியாவின் இலங்கை ஸ்தானிகர் கலாநிதி ஜெரொமிர் செட்லக் மேற்கண்டவாறு கூறினர்.

இலங்கை-செக்கோஸ்லவாக்கிய நட்புறவுச் சங்க யாழ். கிளையினல் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கருத்தரங்கிற்கு அதன் தலைவரும், கிளிநொச்சி எம். பி யுமான திரு. வி. ஆனந்தசங்கரி தலைமைதாங்கினர் இலங்கை - செக்கோஸ்லவாக்கிய நட்புறவுச் சங்கப் பொதுச் செயலாளர் திரு. சந்திரா குணசேகராவும் இக்கருத்தரங்கில் பங்குபற்றினர்

**சமஷ்டி அமைப்பு**

ஸ்தானிகர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"பழைய ஆட்சியின்போது பலவகை நிர்பபந்தங்கள் காரணமாகச் சிறுபான்மையினரான சிலாவ் மக்கள் அந்நிய நாடுகளில் குடியேறிக்கொண்டிருந்தனர். ஆனல் சோஷலிஸ அமைப்பு உருவாக்கப்பட்ட பின்பு ஒரு சமஷ்டி அமைப்பின் கீழ் நாம் வாழமுடிந்தது

**தனிநாட்டுக் கோரிக்கை**

"சோஷலிஸ விடுதலைக்கு முன்னர் சிலாவ் மக்களில் ஒரு சாரார் தமக்கெனத் தனி நாடொன்றின் மூலம் இனப் பிரச்னைக்குத் தீர்வு காண முயன்றனர். நீண்ட ஆய்வுகள், ஆலோசனைகளுக்குப் பின்பு இந்தப் பிரச்னையை நாம் தீர்த்துக்கொண்டோம்.

**சோவியத் உதாரணம்**

"நூற்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழுகின்ற சோவியத் நாட்டின் உதாரணம் எங்களுக்கு வழிகாட்டியது. சோவியத்தின் உதாரணத்தை அதே மாதிரிப் பின்பற்ற முயன்றபோது எம்முள் பல தவறுகளும் நிகழ்ந்தன எந்த நாட்டிலிருந்து உதாரணத்தை எடுக்கும்போதும் எங்களுக்கு இயைந்ததாகச் சோஷலிஸத் தத்துவங்களுக்கு மாறுமல் நடக்கப் பயின்றுகொண்டோம். எங்கள் நாட்டு உதாரணத்தை மற்றவர்கள் எடுக்க முயலும்போதும் இது ஓர் உதாரணமாக விளங்கவேண்டும்

**தொழில் முன்னேற்றம்**

"உங்கள் மக்கள், எங்கள் நாட்டு நாகரீகத்தையும்விடத் தொன்மையான நாகரிகம் உடையவர்கள். நாங்கள் சோஷலிஸ சமூக அமைப்புக்கு மாறி, இன்று தொழில்துறையில் முன்னேறியுள்ளோம். எப்படியிருப்பினும் ஒருவரிடமிருந்து மற்றவர் பயின்றுகொள்வது பரஸ்பரம் நன்மை பயக்கும். உங்கள் பிரச்னைகளைப் பற்றி நான் அறியக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

"இரு நாடுகளுக்கிடையிலும் பரஸ்பரம் தொடர்புகள் உண்டு. இரு நாடுகளுக்கிடையிலும் வர்த்தகத்தை வளர்க்கவும் விரும்புகிறேன். மாம்பழம், பப்பாசிப்பழம் முதலியவற்றிலான பாரம்பரியமற்ற பொருட்களை நாங்கள் பெற விரும்புகிறோம்.

"நான் இங்கு முதன் முறையே வந்தாலும், தமிழையும், சிங்களத்தையும் அறிந்த எமது நாட்டு அறிஞர்கள், இலங்கையைப் பற்றி எழுதிய நூல்களிலிருந்து இலங்கையைப் பற்றி நாம் நன்கு அறிந்துள்ளோம்

"விசேஷமாக யாழ்ப்பாண மக்களை எமது நாட்டு மக்கள் மறக்கமாட்டார்கள். ஏனெனில், சுழியோடிகள் மூலமாகப் பிடிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கடல் வளங்கள் எமது நாட்டுத் தொலைக்காட்சியில் காட்டப்பட்டன.

யாழ்ப்பாணத் தொகுதி எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது! "எங்கள் பிரதேசத்திற்கு வந்து, எங்கள் பிரச்னைகள் பற்றி அறிந்ததையிட்டு அவருக்கு நன்றி செலுத்துகிறோம் இனப் பிரச்னைத் தீர்வுக்கு மார்க்ஸிஸம் வழிகாட்டியுள்ளது தமிழர் விடுதலைக் கூட்டணியினராகிய நாம் சோஷலிஸ நாடுகளுடன் நட்புறவுகொள்வதைக் கொள்கையாகக் கொண்டுள்ளோம். இரு இனங்கள் ஒற்றுமையாக வாழும் நட்டிற்குச் செக்கோஸ்லவாக்கியா நல்ல உதாரணமாக விளங்குகின்றது." (உ)

## "விளையாட்டுப் போட்டிகளால் மனப்பக்குவம் ஏற்படுகிறது"

[மட்டுவில்]

"வாழ்க்கையில் ஏற்படும் வெற்றி தோல்விகளைச் சமாளித்து மனிதன் மனிதனுக வாழ விளையாட்டுத்துறை ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. ஆகவே நாம் எமது வாழ்வில் விளையாட்டுத்துறையைப் பேணி வளர்க்கவேண்டியது அவசியம். இதனல் மனப் பக்குவமும் ஏற்படுகிறது."

இவ்வாறு தென்மராட்சி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்திற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்திய விளையாட்டுக்கழகத் தலைவர், திரு.எஸ். கே. மயில்வாகனம் கூறினர்.

இதைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. சு. முருகவேள் பரிசில் வழங்கி உரை நிகழ்த்துகையில்,

'விரைவில் தென்மராட்சிக்கு ஒரு நவீன விளையாட்டு மைதானத்தை அமைப்பதில், நானும் எமது எம். பி திரு. வி. என் நவரத்தினமும் விடா முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். விரைவில் அந்த முயற்சியால் தென்மராட்சி மக்களுக்கு ஒரு நவீன விளையாட்டு மைதானம் அமைக்கப்படலாம். ஆகவே இளைஞர்கள் பல விளையாட்டுக்கழகங்களை உருவாக்கி விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கவேண்டும்" என்றார். செயலாளர் நன்றியுரை நிகழ்த்தினர். [உ]

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் வடக்குக் கிராம அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் தற்காலிகத்தலைவர் திரு. கே. முத்துவேல் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் க. முத்துவேல் உபதலைவர் நம்பியாரூரன் உபதலைவர் மு. நல்லையா செயலாளர் வ. சிவலிங்கம் உபசெயலாளர் வே கந்தையா பொருளாளர் இ. இராசரத்தினம் கணக்காய்வாளர் செ. நவரத்தினம் மேலும் 15 நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [உ]


**RIO** Daily 4 Shows
ROD TAYLOR
in
**PARTIZAN**
விடுதலை விரும்பிய யூகோஸ்லாவிய மக்கள் நாஸிஜெர்மனிக்கு எதிராக நடத்திய ஜீவமரணப் போராட்டம்.

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
**கல்யாணமாம் கல்யாணம்**


## யாழ். விஜயம்

[திருநெல்வேலி]

லண்டன் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் விசேட ஆணையாளர் எதிர்வரும் 17ம் திகதி யாழ்ப்பாணம் விஜயம்செய்கின்றர்.

இவர் பல வெளிநாடுகளில் விஜயத்தை முடித்துக்கொண்டு வரும் இவருக்கு யாழ்அரசாங்க அதிபர் தலைமையில் ஓர் வரவேற்புவிழா ஏற்பாடு செய்யப்படுகிறது. வடபிராந்திய ஆணையாளர் ஈ. பி. இராசையாவும், வடபகுதி கல்வி அதிகாரி எஸ். பி. சிவபாதமும் சகல சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கங்களுக்கும் பாடசாலைகளுக்கும் அணிமரியாதை செலுத்துவதுபற்றி அறிவித்துள்ளார்.

அகில இலங்கை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைவர் டாக்டர் எவ் ஒ. பெர்னண்டோ பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். இவ்வரவேற்பு விழா யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கில் அன்று மாலை நடைபெறும், (க)

## விவசாயப்படை ஊழியர்கள் ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

முன்னுள் விவசாயப்படை ஊழியர் சங்கக் கூட்டம் சங்கத்தின் வடபிராந்திய அமைப்பாளர் திரு. நா. விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற போது முன்னுள் விவசாயப் படை ஊழியர்களின் எதிர்காலம்பற்றி ஆலோசிக்கப்பட்டது.

திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன ஜனதிபதியாகப் பதவி ஏற்கும் தினமான பெப்ரவரி 4ம் திகதி வடபகுதியில் உள்ள சகல கோவில்களிலும் விசேட ஆராதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திரு. விசுவநாதன் விவசாயப்படை ஊழியருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

முன்னுள் விவசாயப்படை முகாம் பொறுப்பதிகாரி திரு. வி. எம். வி. வடிவேற்கரசன் கூட்டத்தில் நன்றியுரை கூறினர்.

# 'இன, மத மொழி எல்லைகளுக்கு அப்பாற்பட்டவராக கவிஞர் இக்பால் விளங்கினர்''

— கல்வி அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

கவிஞர் இக்பால் மனித இன முன்னேற்றத்திற்காக உழைத்து, இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்டவராக விளங்கினர். அப்பாதையில் நாமும் சென்று நாட்டின் ஐக்கியத்திற்திற்கு பாடுபடுவோம்.

யாழ். ஒஸ்மானியா கல்லூரியில் நடத்த கவிஞர் இக்பால் நூற்ருண்டு விழாவில் பேசிய கல்வி அமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தின மேற்கண்டவாறு கூறினர்.

கல்வி அமைச்சர் பேசும் போது மேலும் கூறியதாவது:

இங்கு பேசிய, திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. லோகேஸ்வரன், திரு. பென்னம்பலம் ஆகியோர் இக்பாலின் இலட்சியத்தை ஒருகோணத்திலிருந்து பேசினர்கள். திரு. அமிர்தலிங்கம் ஒரு அரசியல் வாதி. நானும் ஒரு அரசியல் வாதி தான. திரு அமிர்தலிங்கத்திற்கு அவரது கருத்துக்கள் உண்டு. அதேபோன்று எனக்கும் எனது கருத்துக்கள் உண்டு.

கவிஞர் இக்பால், மத, இன, மொழி எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர் அதைப்போன்று நாமும், நாட்டின் ஐக்கியத்திற்காக உழைக்கவேண்டும்.

முஸ்லிம் மக்களின் நீண்ட கால சரித்திரத்திலிருந்து நாம் அறியக்கூடியது. அவர்கள் மற்ற இனமக்களுடன் சகோதரத்துவத்துடன ஒற்றுமையாக வாழ்ந்துவந்தார்கள் என்பதே இந்நாட்டில் எல்லா மக்களும் ஒவ்வொருவருடன், பரஸ்பரம் நட்புறவு கொண்டு வாழவேண்டும். [க]

# கல்வி அமைச்சர் கொழும்பு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தினவிற்கு நேற்று காலை குறிகாட்டுவானில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் திரு. ம. அமிர்தலிங்கம் தலைமையில் தீவுப்பகுதி ஐ. தே. க. கிளை உறுப்பினர்கள் இந்த வரவேற்பை அளித்தனர்.

ஐ தே. க. கொடிகள் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட 20 வள்ளங்களில் மக்கள் குறிகாட்டுவானை வந்தடைந்தனர். இவர்கள் அமைச்சருக்கு அணி வகுத்துநின்று மாலை சூட்டினர்.

அங்கிருந்து கல்வி அமைச்சர் நயினதீவுக்கு சென்று வழிபாடுசெய்தார். அமைச்சருடன் 5 படகில், ஆதரவாளர்களும் நயினதீவு சென்று அமைச்சருடன் திரும்பினர். அமைச்சர் நேற்றுக் காலை வேலணைக்கும் சென்ருர்.

நேற்று மாலை கல்விஅமைச்சரை வடபகுதி ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர்கள் தூது கோஷ்டி கிங்ஸ் ஹவுஸில் சந்தித்து உரையாடினர். நேற்று மாலை அமைச்சர் ரயிலில் கொழும்புதிரும்பினர். (க)

......

முல்லைத்தீவுதபால் கந்தோரில்

# கலாட்டா செய்தாராம் இளைஞர் கைது;

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தபாற்கந்தோருக்குள் சென்று தபால் அதிபரையும் ஊழியரையும் பயமுறுத்தியதாக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரான சுந்தரலிங்கம் என்றஇளைஞர் முல்லைத்தீவு தபால் நிலையத்திற்குள் சென்று கலாட்டா செய்த போது அங்கு 60,000 ரூபா இருந்ததாகவும் பாதுகாப்புக்கருதி தபால் கந்தோர் அதிபர் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் புகார் செய்ததாகத் தெரியவருகிறது.

பொலிஸார் நடவடிக்கை எடுக்க தாமதித்தலைத தொடர்ந்து இராணுவஅதிகாரி தபால் நிலையத்திற்கு சென்றதாகவும் அச்சமயம் சந்தேகநபர் பொலிஸ்நிலையத்திற்கு சென்று சரணடைந்ததாகவும் இச்சம்பவம்பற்றிக் கூறப்படுகிறது.

இராணுவஅதிகாரி பொலிஸ் நிலையம் சென்று சந்தேக நபரை வைத்திய பரிசோதனைக்குட்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இராணுவ அதிகாரி தலைமைப்பீடத்திற்கு செய்துள்ள புகாரில் உரிய நேரத்தில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத்தவறியதால் அரசு உடைமையைபாதுகாக்க நடவடிக்கை எடுத்ததாக தெரிவித்துள்ளார். [ஸ]

பொய் முறைப்பாடு செய்தாராம்:

# ப. நோ. கூ. ச. மனேஜர் உட்பட மூவர் கைது!

[சங்கானை]

ப. நோ கூ. ச. கிளையில் உள்ள பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாக பொய்முறைப்பாடு கொடுத்த குற்றச்சாட்டின் பேரில் அதே கிளையின் பொது முகாமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சங்கானை ப நோ கூ சங்கத்தின் கீழ் இயங்கிவரும் நெல்லியான் கிளை கடந்த புதன் கிழமை இரவு உடைத்துக் களவாடப்பட்டுள்ளதென மேற்படி கிளை முகாமையாளர் வ. சின்னத்துரை சங்கானைப் பொலிஸில் புகார் செய்திருந்தார்.

சம்பவம் நிகழ்ந்த மறுதினம் பொலிசாருக்குக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து கடைக்குப் பக்கத்தில் உள்ள நெல்வயல் ஒன்றில் களவாடப்பட்டதெனக் கருதப்படும் மா மூடைகள், துணிவகைகள், பவுடர் ஆகிய பொருட்களை பொலிஸ் சார்ஜன்ட் குலசிங்கம், கான்ஸ்டபிள் இமானுவேல் ஆகியோர் கைப்பற்றினர். இதைத்தொடர்ந்துமேற்படி புகாரைச் செய்த முகாமையாளரையும் அதே கடையில் கடமை புரியும் விற்பனையாளர் ஆர் கணேசன், முன்னர் அக்கிளையில் கடமைபுரிந்த காவலாளரான எம். தேவலிங்கம் ஆகிய மூவரையும் சந்தேகத்தின்மீது கைதுசெய்துள்ளனர். (இ)


## மரண அறிவித்தல்

### சுப்பையா வீரசேகரம்பிள்ளை

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இளைப்பாறிய இலங்கை வங்கி மேற்பார்வையாளர் சுப்பையா வீரசேகரம்பிள்ளை காலமானர். இவர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், ரவீந்திரன் (லண்டன்) யசோதரா ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னரின் ஈமைக்கிரிகைகள் நாளை (31-01-78) செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று தகனக் கிரிகைக்காக ஆனைக்கோட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

8369


# காந்தி கிராமத்தில் கல்வி நிலையம்

(சுழிபுரம்)

'தொல்புரம் காந்திக்கிராமத்தில் ஒரு கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது மிகவும்வரவேற்கத்தக்கதாகும். கிராமத்தை முன்னேற்றுவதே காந்திஜியின் முக்கிய குறிக்கோளாகஇருந்தது. ஆதலால்தான் படித்த வாலிபர்களை கிராமங்களில் போய் குடியேறுமாறு வேண்டிக்கொண்டார். கிராமத்தில் வாழும் பின்தங்கிய மக்களை முன்னேற்ற இன்று ஆரம்பிக்கப்படும் கல்விநிலையம் பெரும் உதவியாக விளங்கும்.'

இவ்வாறு தொல்புரம் தையல்பாகர் வீதியிலுள்ள காந்திக்கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நாராயணன் கல்விநிலைய திறப்புவிழா வைபவத்தில் கலந்து ஆசியுரைகூறிய மலேயன் பென்சனர் திரு. மூ. தாமோதரம்பிள்ளை குறிப்பிட்டார். புதிய கல்விநிலையத்தை வைத்திய அதிகாரி எம். இராசநாயகம் திறந்துவைத்தார். வித்துவான் நா. சிவபாதசுந்தரனார் நன்றியுரை கூறினர்.


## விற்பனைக்கு

புதிய இந்திய தமிழ் இசைத் தட்டுக்கள் கைவசமுள்ளன. உடனே தொடர்பு கொள்ளவும். பரமேஸ் கோணேஸ் புரடக்ஷன்ஸ், 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8371

## தேவை

ஹோட்டல் வேலையில் அனுபவமுள்ள வேலையாட்கள் உடன் தேவை. நேரில் வரவும். திறி கொயின்ஸ் ஹோட்டல், 35, கஸ்தூரியார்வீதி யாழ்ப்பாணம். 8370


# திருமணத்திற்கு முன் திருட்டு ஆசை வந்ததாம்

## வாலிபர் றிமாண்டில்

[வேலணை]

கடந்த வாரம் திருமணம் செய்யவிருந்த வாலிபர் ஒருவர் 8 பவுண் நிறையுடைய தங்கத் தாலிக்கொடியையும் ஒருசோடி காப்பையும் திருடியதாக ஊர்காவற்றுறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்ததைத் தொடர்ந்து பொலிசார் அவரை சந்தேகத்தின்பேரில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இசேம்பவம் காரைநகர் வேதன் அடைப்பு என்ற இடத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

மேற்படி இதே இடத்தைச் சேர்ந்த பெண் ஒருவரது வீட்டில் இருந்து அதே இடத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் இந்த நகைகளைத் திருடிச்சென்று தர்மபுரத்தைச் சேர்ந்த சுட்டிகுளத்தில் அடைவு வைத்ததாகவும் ஊர்காவற்றுறைப் பொலிசாருக்கு தகவல் கிடைத்ததாம்.

ஊர்காவற்றுறைப் பொலிசைச் சேர்ந்த திரு பரமநாதன் திரு யாப்பா ஆகியோர் இவரை சுட்டிகுளத்தில் கைது செய்து வேலணை சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

எதிரி தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரிலும் எடுத்த நகைகளை திருப்பிக் கொடுக்கச் சம்மதித்ததன் பேரிலும் எதிரியை அடுத்த மாதம் 2-ந் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# கடந்த வருடம் 140 பொலிசார் தற்காலிக வேலைநீக்கம்

[கொழும்பு]

கடந்த ஆண்டு 140 பொலிசார் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 112 பேர்பொலிஸ் கான்ஸ்டபிள்களாவர்.

2 இன்ஸ்பெக்டர்கள், 10 உதவி இன்ஸ்பெக்டர்கள், 12 சார்ஜண்டுகள் ஆகியோரும் இவர்களுள் அடங்குவர்.

மதுபோதையில் இருந்தமை, லஞ்சஊழல், கற்பழிப்பு, தாக்குதல் நடவடிக்கை காரணமாகவே இவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு கடந்த 25 நாட்களில் 15க்கும் அதிகமான பொலிஸ் கான்ஸ்டபிள்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனரென்றும், இவர்கள் கற்பழிப்பு, பஸ் கொள்ளை, நம்பிக்கை மோசடி ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே இவர்கள் வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

பொலிஸ் சேவையில் ஆட்களைச் சேர்க்கும் பழையமுறை விரைவில் மாற்றி அமைக்கப்படும். அன்றேல் பொலிஸ் சேவையில் ஒழுங்கினத்தை நிறுத்தமுடியாதென்றும் அவர் கூறினர். [இ]

# பேரவை இன்று கூடுகிறது

[கொழும்பு]

தேசிய அரசுப் பேரவை இன்று பிற்பகல் 2 மணிக்கு கூடுகிறது. பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவிசேட ஜனதிபதி ஆணைக்குழு சட்டமூலத்தை இன்று பேரவையில் சமர்ப்பிப்பார். [ம]

## 'விஸ்கி'யை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போது பயணிகளும் விமானிகளும் அவனை மடக்கிப்பிடித்தனராம்.

வடகரோலினவில் கைது செய்யப்பட்ட அந்நபர் ஒரு லட்சம் டாலர் பிணையில்விடப்பட்டுள்ளார். (இ)

## இனப்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அமைச்சர் கரவெட்டியிலுள்ள விகாரைக்குச் சென்று வணங்கியபின் வித்தியாலயத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

திரு க குலசிங்கம் தலைமையில் நடைபெற்றஇவ்வைபவத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

தாம் விரும்பிய மொழியை தேர்ந்தெடுக்க இந்நாட்டில் சகலருக்கும் உரிமையுண்டு. நாம் எந்த மொழியையும் எவர் மீதும் கட்டாயமாகத் திணிக்க மாட்டோம். சகலருக்கும்அவரவர் மொழியைப் படிக்க வசதிகள் செய்து கொடுப்போம். வேறுமொழியைக் கற்பதன் மூலம் தமது மொழி அழிந்துவிடுமென எண்ணுவது தவருகும்.

இக்கல்லூரியிலுள்ள குறைபாடுகள் பற்றி எமக்குத் தெரிவித்துள்ளார்கள். அக்குறைபாடுகளை நீக்க நான் நடவடிக்கை எடுப்பேன். இப்பாடசாலையில் தமிழில் கல்விபயிற்றுவிக்கவும் நடவடிக்கை எடுப்பன். [இ]

கிரிக்கட் டெஸ்ட்

# ஆஸி-505 இந்தியா-3-131

அடிலெய்ட், ஜன. 29

இந்திய-ஆஸ்திரேலியஇறுதி டெஸ்டின் 2வது நாளான இன்று இந்தியக்கோஷ்டி துடுப்படி வீரர் குண்டப்பா விஸ்வநாத்தின் சிறந்தஆட்டத்தினுல் ஆட்டநேர இறுதியில் ஓரளவு ஸ்திரமான நிலையைஅடைந்தது.

ஆஸ்திரேலியா சகல விக்கட்டுகளையும் இழந்து 505 ஓட்டங்களைப்பெற்றிருந்தது. காப்டன் சிம்சன் 100 ஓட்டங்களைப் பெற்ருர். சந்திரசேகர் 5விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

துடுப்பாட ஆரம்பித்த இந்தியக்கோஷ்டி முதல் மூன்று விக்கட்டுகளையும் 23 ஓட்டங்களுக்கு இழந்தது.

இந்நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த விஸ்வநாத்தும், வெங்சர்கரும் முறையே 79, 26 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருக்கின்றனர்.

ஸ்கோர். விபரம் ஆஸி-605 இந்தியா 131-7. [இ]

# மண்டை ஓடு விற்பனை மூலம் ஒரு கோடி வருமானம்

புதுடில்லி, ஜன. 29

இந்தியாவில் உள்ள பிரேதச்சாலைகளில் வைக்கப்பட்டிருக்கும் பிரேதங்களின் தலைகள் சட்டவிரோதமாகத் துண்டிக்கப்பட்டு அவற்றின் மண்டை ஓடுகள் சர்வதேச சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் வருடாந்தம் 1 கோடி ரூபா சம்பாதிக்கப்பட்டு வருவதாக இந்துமதக்குழு ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

இந்த மண்டை ஓடுகள் தலா 50 டாலர் வீதம் விற்கப்படுகின்றன என்றும் அக்குழு குற்றம் சுமத்தியுள்ளது [இ]

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.